22nd April 1959]

SRI M. P. PERIASAMI: கனம் தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமாக வெளிநாடுகளில் போடப்பட்டிருக்கும் திட்டங்களை சினிமா படம் பிடித்துக் காட்டுகிறார்கள். அதைப்போல் குந்தா போன்ற பெரிய திட்டங்களை சினிமா படம் பிடித்துக் காட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

MR. SPEAKER: இதைப்பற்றியெல்லாம் மின்சார பட்ஜெட் விவாதத்தின் போது பேசலாம்.

SRI M. S. SELVARAJAN: பெரியாறு திட்டம், திட்டபிரகாரம் நிறைவேறி வருகிறதா ? அவ்விதம் நிறைவேறி வருகிறது என்றால் பெரியாற்றிலிருந்து பெரும் அளவுக்கு பெருவதாயிருக்கும் தாரங்கதாரா கெமிக்கல் வொர்க்ஸ்க்கு போதுமான மின்சார சப்ளை தக்க சமயத்தில் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH: பெரியாறு திட்டத்தைப் பொறுத்த அளவில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதிலிருந்து தொழிற்சாலைக்கு வேண்டிய மின்சார சப்ளை டரான்ஸ்மீட்டர்கள் ஏற்படுத்தியதும் காலாகாலத்தில் கொடுக்கலாம் என்றுதான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. S. SELVARAJAN: தாரங்கதாரா கெமிக்கல் வொர்க்ஸ்க்கு காலாகாலத்தில் மின்சார சப்ளை கிடைக்காத காரணத்தினால்தான் அங்கு வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் குறைந்தபட்ச தேவைக்காவது உடனடியாக மின்சார சப்ளை கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடுகளைச் செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH: மின்சாரம் கிடைக்காததினால் வேலைகள் ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஆகிறது என்று சொல்வது சரியல்ல. சீக்கிரமாகவே அவர்களுக்கு போதிய அளவு மின்சார சப்ளை கொடுக்க முடியும் என்று அரசாங்கம் நிச்சயமாக நம்புகிறது.

Construction of new cinema theatres

* 82 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI A. A. RASHEED): Wil the Hon. the Minister for Home be pleased to state whether the Government have banned the Construction of new cinema theatres in the Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

Cultivating Tenants' Protection Act

* 83 *Q.*—SRI S. LAZAR (on behalf of SRI T. SAMPATH): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any recommendations have been received from the High Court, Madras, suggesting vesting of powers and jurisdiction to the District Munsifs in the respective areas for hearing and disposing petitions coming under the Madras Cultivating Tenants' Protection Act, 1955 (Madras Act XXV of 1955), and the Madras Cultivating Tenants Protection (Amendment) Act, 1956 (Madras Act XIV of 1956), now exercised by the Revenue Divisional Officers;

(*b*) if so, whether the Government have any intention of implementing the recommendations; and